செய்தி வெளியீடு எண் : 04 நாள் : 07.08.2020

**தேனி மாவட்டம்**
**பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்களின் பங்களிப்புடன் மொத்தம் ரூ.1 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படவுள்ள 12 கண்மாய்கள் சீரமைக்கும் பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் துவக்கி வைத்தார்:-**

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் தேனி மாவட்டம், பொதுமக்கள் மற்றும் தன்னார்வலர்களின் பங்களிப்புடன் பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட கெங்குவார்பட்டி மத்துவார்குளம் கண்மாய், மேல்மங்கலம் நெடுங்குளம் கண்மாய் ஆகிய கண்மாய்களில் சீரமைக்கும் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (07.08.2020) துவக்கி வைத்தார்.

தமிழக அரசு தமிழகத்தில் வறட்சியை எதிர்கொள்ளவும், நீர்வள ஆதாரங்களை மேலாண்மை செய்திடவும் விவசாயிகளின் பங்களிப்புடன் நீர் நிலைகளை புனரமைக்கும் பண்டைய குடிமராமத்து திட்டத்தினை செயல்படுத்திட உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் உள்ள குளங்களில் குடிமராமத்து திட்டத்தின் கீழ் வரத்து வாய்க்கால் மற்றும் கால்வாய்கள், ஏரிகள், மதகுகள் மற்றும் பிற நீர்நிலைகள் ஆகியவற்றை புனரமைத்தல், பலப்படுத்துதல் மற்றும் கலிங்குகள், மதகுகளை மறுகட்டுமானம் செய்தல், நீர்வழிகளில் அடைத்திருக்கும் செடிகளை அகற்றுதல் போன்ற பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதுதவிர, தன்னார்வலர்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடனும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகள் குளங்கள் மற்றும் கண்மாய்கள் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனடிப்படையில், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் வழிக்காட்டுதலின்படி, தன்னார்வலர்களின் சார்பில், தேனி மாவட்டத்தில் 2020-21-ஆம் நிதியாண்டில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் குளங்கள் மற்றும் கண்மாய்கள் சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது.

அதன்படி, தேனி மாவட்டத்தில் மஞ்சளாறு வடிநில கோட்டத்திற்குட்பட்ட கெங்குவார்பட்டி மத்துவார்குளம் கண்மாய், கண்மாய் சீரமைக்கும் பணி, மேல்மங்கலம் நெடுங்குளம், பொட்டல்வண்ணான்குளம், லட்சியம்பட்டிகுளம் ஆகிய கண்மாய்கள், பெரியாறு வைகை வடிநில கோட்டத்திற்குட்பட்ட வெங்கடாசலபுரம் தாதயகவுண்டன்குளம் கண்மாய், சிலமலை பாறைக்குளம் கண்மாய், சூலப்புரம் கண்மாய், டி.புதுக்கோட்டை (பொட்டிபுரம்) கட்டபொம்மன்குளம் கண்மாய், பல்லவராயன்பட்டி தாதன்குளம் கண்மாய், கோகிலாபுரம் தாமரைக்குளம் கண்மாய், அனுமந்தன்பட்டி வள்ளியம்மன்குளம் கண்மாய், தெப்பம்பட்டி வெள்ளைப்பாறை கண்மாய், வரதராஜபுரம் அதிகாரிகுளம் கண்மாய், தங்கம்மாள்புரம் கோவில்பாறை கண்மாய் என மொத்தம் 12 கண்மாய்கள் சுமார் ரூ.1 கோடி மதிப்பீட்டில் தூர்வார நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அப்பணிகளின் தொடக்கமாக இன்றைய தினம் பெரியகுளம் வட்டத்திற்குட்பட்ட கெங்குவார்பட்டியில் உள்ள மத்துவார்குளம் கண்மாயிலும் மற்றும் மேல்மங்கலம் லட்சியம்பட்டிகுளம் கண்மாயிலும், மேற்கொள்ளப்படவுள்ள சீரமைப்பு பணிகளை மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

இதில் கெங்குவார்பட்டியில் உள்ள மத்துவார்குளம் கண்மாயின் கரை 1330 மீட்டர் நீளத்திலும், 99.29 (40.20 ஹெக்டர்) ஏக்கர் நீர்பிடிப்பு பரப்பளவும், 17.13 மி.கன அடி கொள்ளவும், கலிங்கு 1 எண்ணிக்கையிலும், மடைகள் 2 எண்ணிக்கைகளில் அமைந்துள்ளது. இதேபோன்று, மேல்மங்கலம் நெடுங்குளம் கண்மாயின் கரை 1920 மீட்டர் நீளத்திலும், 1467.31 ஏக்கர் நீர்பிடிப்பு பரப்பளவும், 12.82 மி.கன அடி கொள்ளவும், 1 கலிங்கு மற்றும் மடைகள் 3 எண்ணிக்கையிலும் அமைந்துள்ளது.

மேலும், இக்கண்மாய்களில் உள்ள முட்செடிகளை அகற்றி, தூர்வாரி, கரைகளை பலப்படுத்தும் பணி, மடையில் சட்டர் மற்றும் கலுங்கு மராமத்துப்பணி, சிமிண்ட் எல்லைக் கற்கள் அமைத்து அளவீடு செய்யும் பணி, ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி தண்ணீர் முழு கொள்ளவு தேங்கிட வழிவகை செய்யும் பணி ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. கெங்குவார்பட்டி மத்துவார்குளம் கண்மாயின் மூலம் பாசனவசதி பெறும் 118.61 ஹெக்டர் (292.97 ஏக்கர்) நிலங்களும், மேல்மங்கலம் நெடுங்குளம கண்மாயின் மூலம் வராகநதி அணைக்கட்டு வாய்க்கால் (ஜெயமங்கலம்) பகுதிகளில் உள்ள விவசாய நிலங்கள் பாசன வசதி பெற்று, அதன் மூலம் விவசாயிகள் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதனைத்தொடர்ந்து, மேற்கண்ட பல்வேறு பகுதிகளில் குளங்கள் மற்றும் கண்மாய்கள் சீரமைப்பு பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது.

இந்நிகழ்களின் போது, தேனி பாராளுமன்ற உறுப்பினர் திரு. ப.ரவீந்திரநாத்குமார், அருள்மிகு கைலாசநாதர் திருக்கோவில் அன்பர் பணிசெய்யும் திருப்பணிக்குழுத்தலைவர் வி.ப.ஜெயபிரதீப், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, பெரியகுளம் சார் ஆட்சியர் டி.சிநேகா, இ.ஆ.ப., பொதுப்பணித்துறை (நீர்வள ஆதார அமைப்பு) மஞ்சளாறு வடிநிலக் கோட்ட செயற்பொறியாளர் கார்த்திகேயன், பெரியகுளம் வட்டாட்சியர் ரத்தினமாலா, அரசு ஒப்பந்ததாரர் பாண்டியராஜன், விவசாயிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**